செய்தி வெளியீடு எண்:- 475 நாள்:- 26.7.2007

# மாநிலங்களவை உறுப்பினராக திருச்சி சிவா, கனிமொழி, டி. ராஜா ஆகியோர் பதவியேற்பு

## பிரதமர், தமிழக முதல்வர் நேரில் வாழ்த்து.

தமிழகத்தின் சார்பில் மாநிலங்களவை உறுப்பினர்களாக கழகத்தின் சார்பில் தேர்ந்தெடுக்கப்பட்ட திருச்சி சிவா, கனிமொழி, மற்றும் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் தேர்ந்தெடுக்கப்பட்ட டி. ராஜா ஆகியோர் புது டெல்லியில், மாநிலங்களவைத் துணைத் தலைவர் மாண்புமிகு ரெகுமான்கான் முன்னிலையில் பதவியேற்றனர்.

பதவியேற்பு நிகழ்ச்சிக்கு இந்தியப் பிரதமர் டாக்டர் மன்மோகன் சிங் அவர்களும், தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்களும் நேரில் வந்திருந்து பதவியேற்ற கனிமொழியையும், மற்ற உறுப்பினர்களையும் வாழ்த்தினர். பிரதமர் மன்மோகன்சிங் பதவியேற்ற மூவருக்கும் பட்டாடை அணிவித்து வாழ்த்தினார்.

பதவியேற்பு நிகழ்ச்சிக்கு மத்திய அமைச்சர்கள் ப. சிதம்பரம், டி.ஆர். பாலு, ஆ. ராஜா, பழனிமாணிக்கம், ஜி.கே. வாசன், ரகுபதி, வேங்கடபதி, சுப்புலட்சுமி ஜெகதீசன், ராதிகா செல்வி, தாஸ் முன்ஷி, பச்சோடி மற்றும் அகமது பட்டேல் ஆகியோரும், தமிழக அமைச்சர்கள் ஆற்காடு வீராசாமி, துரைமுருகன், தங்கம் தென்னரசு, பூங்கோதை ஆகியோரும், நாடாளுமன்ற உறுப்பினர்கள் செ. குப்புசாமி, எல். கணேசன், தங்கபாலு, ஞானதேசிகன், கார்வேந்தன், ஆ. கிருஷ்ணசாமி, கரூர் கே.சி. பழனிச்சாமி, சண்முகசுந்தரம், ஏ.கே.எஸ். விஜயன், வேணுகோபால், சுகவனம், பவானி ராசேந்திரன் மற்றும் புதுவை நாராயணசாமி, சற்குணப்பாண்டியன், சங்கரி நாராயணன், ஜோன்ஸ் ரூசோ, அப்பாவு, காமராஜ், நல்லி குப்புசாமி செட்டியார், தொலைக்காட்சி முன்னாள் இயக்குநர் நடராஜன் ஆகியோர் வந்திருந்து கனிமொழிக்கு வாழ்த்து தெரிவித்தார்கள்.

முதல்வரின் துணைவியார் திருமதி ராஜாத்தி அம்மாள், கனிமொழியின் கணவர் திரு. அரவிந்தன், மகன் ஆதி, அண்ணாவின் மருமகள் திருமதி துளசி, டாக்டர் நீலமேகம் ஆகியோரும் வந்திருந்தனர்.

மாநிலங்களவை துணைத் தலைவர் மாண்புமிகு ரெகுமான் கான் அவர்கள் பதவியேற்பு முடிந்ததும் அனைவருக்கும் தேநீர் விருந்தளித்தார்.

வெளியீடு:- இயக்குநர்,